**செய்தி வெளியீடு எண்: 892** **நாள்: 10.12.2018**

**செய்தி வெளியீடு**

மகாகவி பாரதியார் அவர்களின் பிறந்தநாள் ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடப்படுகிறது. மகாகவி பாரதியார் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தமிழக அரசின் சார்பில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சென்னை, மெரினா கடற்கரை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப் படத்திற்கு 11.12.2018 அன்று காலை 9.00 மணியளவில் மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன் செயல்படும் தமிழக அரசு, தமிழ்ச் சான்றோர்கள், விடுதலைப் போராட்ட தியாகிகள் மற்றும் தலைவர்கள் ஆகியோரை பெருமைப்படுத்தும் வகையில், அன்னார்களது பிறந்தநாளன்று தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி, விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், மகாகவி பாரதியார் அவர்களின் பிறந்த தினமான டிசம்பர் 11ஆம் நாள், ஒவ்வொரு ஆண்டும் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

மகாகவி பாரதியார் அவர்கள், தூத்துக்குடி மாவட்டம் எட்டையபுரத்தில் சின்னச்சாமி அய்யர் – இலட்சுமி அம்மாள் தம்பதியருக்கு மகனாக 11.12.1882 அன்று பிறந்தார். மகாகவி பாரதியார் அவர்களின் இயற்பெயர் சுப்பிரமணியன் ஆகும். இவருடைய கவிபுனையும் ஆற்றல் அறிந்து எட்டையபுரம் ஜமீன் சூட்டிய பெயர் பாரதி என்பதாகும்.

1894இல் திருநெல்வேலியில் உள்ள இந்துக் கல்லூரி உயர்நிலைப்பள்ளியில் மூன்றாண்டுகள் பயின்றார். பின்னர், காசியில் உள்ள ஜெய்நாராயண பள்ளியில் படித்தார். இங்கு இந்தியிலும், சமஸ்கிருதத்திலும் நன்கு தேர்ச்சி பெற்றார். காசியில் உள்ள அலகாபாத் பல்கலைக்கழகத்தில் 1899ஆம் ஆண்டு நடைபெற்ற நுழைவுத்தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். பின்னர் எட்டையபுரம் மன்னர் அழைப்பின் பேரில் காசியில் இருந்து திரும்பி அங்கு பணியில் சேர்ந்தார். பின்னர் பாரதியார் அவர்கள் எட்டையபுரத்திலிருந்து மதுரைக்குச் சென்று சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் மூன்றாண்டுகள் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார்.

1906 டிசம்பரில் கல்கத்தாவில் தாதாபாய் நௌரோஜி தலைமையில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் கலந்துகொண்டார். பின்னர் 'இந்தியா' என்ற பத்திரிகையில் பாரதியார் அவர்கள் சேர்ந்து தன் உள்ளக் கருத்துக்களை கவிதைகளாக வெளிப்படுத்தினார். 'இந்தியா' பத்திரிகை ஒவ்வொரு வாரமும் தந்த பாடல்கள் மூலமாகவும், கட்டுரைகள் மூலமாகவும் எதேச்சதிக்கார முறையைக் கண்டித்தது.

1908இல் லாலா லாஜபதிராய் நாடு கடத்தப்பட்டதைக் கண்டித்து, சென்னையில் நடந்த கூட்டத்தில் பாரதியார் அவர்கள் உணர்ச்சிமிகு பாடல்களைப் பாடினார். வ.உ.சிதம்பரனாரின் தன்னலமற்ற நாட்டுப் பணியையும், சுதேசிக் கப்பல் கம்பெனி முயற்சியை ஆதரித்தும் 'இந்தியா' பத்திரிகையில் எழுதினார்.

பாரதி ஒரு புதுமைப்பித்தர். பெண்கள் விடுதலைக்காக எழுச்சிமிகு பாடல்களைப் பாடினார். குழந்தை திருமணத்தை எதிர்த்தார். பெண் உரிமை காத்திடப் போர் முரசு கொட்டினார். தாய்மொழியாம் தமிழை தெய்வமாகவேப் போற்றினார்.

இவர் ஆங்கிலம், சமஸ்கிருதம், பிரெஞ்சு, இந்தி, வங்கம், உருது, வங்காளி, தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகளை கற்றுத் தேர்ந்தவர். இப்படி பல மொழிகளையும், அம்மொழிகளில் உள்ள பல நூல்களையும் படித்துணர்ந்த பின்புதான் ''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்'' என்று மகாகவி பாரதியார் அவர்கள் போற்றினார்.

சங்க காலத்திற்குப் பிறகு தமிழ்நாட்டில் தோன்றிய மாபெரும் கவிஞர் பாரதியார் அவர்கள், 1921 செப்டம்பர் 12ஆம் நாள் இயற்கை எய்தினார். உலகில் இதுவரை தோன்றிய மகாகவிகளுள் பாரதியார் அவர்கள் ஒருவர். மக்களுக்கு தமது கவிதைகள் மூலம் தமிழ்ப்பற்றையும் தேச பக்தியையும் ஊட்டி மகாகவியானார். பாரதியார் அவர்களின் கவிதைகள் தமிழ் உள்ளவரை, உலகம் உள்ளவரை நிலைத்து நிற்கும்.

மகாகவி பாரதியார் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, தமிழக அரசின் சார்பில் சென்னை, மெரினா கடற்கரை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள மகாகவி பாரதியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப் படத்திற்கு 11.12.2018 அன்று காலை 9.00 மணியளவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத்தலைவர்கள், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**